13.04.2023

கூடுதல் அமா்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமா்வு வழக்கு எண்.43/2021

அ.சா.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காளிதாஸ் | | |
| த/பெ | கலியமூர்த்தி | மதம் | |
| கிராமம் | பள்ளிப்புதுப்பட்டு | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 36/2023 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் பள்ளிப்புதுப்பட்டு காலணியில் வசித்து வருகிறேன். நான் எம்ஆர்எப் நிறுவனத்தில் ஆப்ரெட்டராக வேலை செய்து வருகிறேன். இது சம்மந்தமாக என்னை காவல்துறையினர் விசாரித்தார்கள். அப்போது நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்துகளில் என்னுடையது எதுவும் இல்லை. (சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 13.4.2019 அன்று காலை 10.30மணியளவில் ராஜ்கிரன் இறந்த வழக்கில் கண்டமங்கலம் காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடம் குறித்து என் முன்னிலையிலும் எங்கள் ஊரை சேர்ந்த ஜோதி என்பவர் முன்னிலையிலும் விசாரணை செய்து ஒரு பார்வை மகசர் மற்றும் வரைபடம் வரைந்தார்கள் என்றும், அதில் நானும், ஜோதியும் கையொப்பம் செய்தோம் என்றும், தற்போது எதிரிகளை காப்பாற்றும் நோக்கத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

13.04.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.43/2021

அ.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரபு | | |
| த/பெ | ராமசந்திரன் | மதம் | |
| கிராமம் | சிறுவந்தாடு,மோட்சகுளம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 36/2023 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் சிறுவந்தாடு, மோட்சகுளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் எம்ஆர்எப் நிறுவனத்தில் ஊழியராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 வாசுகி எனது அக்கா ஆவார். அ.சா.2 ராணியை எனக்கு தெரியும். ராஜ்கிரன் எனது அக்கா மகன். அவருக்கு திருமணம் ஆகிவிட்டது. கொத்தாம்பாக்கத்தை சேர்ந்த சசி என்ற கஸ்தூரிக்கு சம்பவத்திற்கு 5,6 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைப்பெற்றது. கடந்த 13.4.2019 தேதி ராஜ்கிரன் இறந்த தகவலை குறித்து என் அண்ணனுக்கு காலையில் சுமார் 7.30மணிக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. நாங்கள் சென்று பார்த்தோம். புதுவையில் இருந்து விழுப்புரம் வரும் ரயில்வே லைனில் தண்டவாளத்தில் அவரது பிரேதம் இருந்ததை பார்த்தோம். அவர் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக என்னை காவல்துறையினர் விசாரித்தார்கள். நான் இதை தவிர்த்து வேறு எந்த தகவலும் சொல்லவில்லை.

(சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி குறுககு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 13.4.2019 அன்று ராஜ்கிரன் இறந்த வழக்கில் அவரது மனைவி சசி என்ற கஸ்தூரி, அவரது கள்ளக்காதலன் தீபக்ராஜ் ஆகியோர் ஆழியூர் கிராம நிர்வாக அலுவலரிடம் தானாக ஆஜராகி கொலை செய்ததை ஒப்புக்கொண்டதை நான் கேள்வி பட்டேன் என்றும், சசி என்ற கஸ்தூரி, 3ம் எதிரி கலா பேரக்குழந்தைகளுடன் ஓடிவிட்டார் என்றும், தலைமறைவாகிவிட்டார் என்றும், காவல்துறை விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-இல்லை